

**ஆட்டினங்களில்  மூலிகை மருத்துவம்**

**ஆட்டுக்கொள்ளை நோய் (P.P.R)**

இந்நோயானது ஒருவகை நச்சயிரியினால் ஏற்படுகிறது. நோயுற்ற ஆடுகளில் காய்ச்சல் 6 முதல் 8 நாட்கள் வரை இருக்கும். வாயில் புண், கண் மற்றும் மூக்கிலிருந்து நீர் வடிதல், வயிற்றுப் போக்கு போன்ற நோய் அறிகுறிகள் காணப்படும். இந்நோயினைக் கட்டுப்படுத்த தடுப்பூசி போடுதல் அவசியம். ஆடுகள் மிகவும் பாதிக்கப்படும்.

**5 ஆடுகளுக்கு தேவைப்படும் மூலிகை மற்றும் மருந்துப் பொருட்கள்**

| | |
|---|---|
| சின்ன சீரகம்   15 கிராம் | மிளகு   5 எண்ணிக்கை |
| வெந்தயம்   15 கிராம் | பூண்டு   5 பல் |
| மஞ்சள்   5 கிராம் | முருங்கை இலை   50 கிராம் |
| பிரண்டை   5 கொழுந்து | கருப்பட்டி (பனை வெல்லம்) 500 கிராம் |









சின்ன சீரகம்   வெந்தயம்   மஞ்சள்   பிரண்டை


மிளகு


பூண்டு


முருங்கை இலை


கருப்பட்டி (பனை வெல்லம்)

**சிகிச்சை முறை (மூன்று வேளைக்கு வாய்வழியாக)**

மேற்கண்ட பொருட்களில் சின்ன சீரகம், வெந்தயம் மற்றும் மிளகினை இடித்து பின்பு இதனை மற்ற பொருட்களுடன் சேர்த்து அரைத்து இக்கலவையை சிறு சிறு உருண்டைகளாக உப்பினில் (தேவைப்படும் உப்பு -15 கிராம்) கலந்து நாக்கின் மேல் தேய்த்து ஒரே வேளையில் அனைத்து உருண்டைகளையும் உள் செலுத்த வேண்டும்.

**கழிச்சல் (Enteritis)**

ஆடுகளில் நீர்த்த, துர்நாற்றமுடைய கழிச்சல் காணப்படும். வால் மற்றும் பின்னங்கால்களில் சாணக்கறை படிந்து காணப்படும். உடலிலுள்ள நீர்ச்சத்து மற்றும் தாது உப்புகள் அதிகமாக வெளியேறி ஆடுகள் சோர்ந்து காணப்படும்.

**5 ஆடுகளுக்கு தேவைப்படும் மூலிகை மற்றும் மருந்துப் பொருட்கள்**

**கலவை 1**

| | |
|---|---|
| சின்ன சீரகம் 15 கிராம் | மிளகு 5 எண்ணிக்கை |
| கசகசா 20 கிராம் | மஞ்சள் 5 கிராம் |
| வெந்தயம் 20 கிராம் | பெருங்காயம் 5 கிராம் |

மேற்கண்ட பொருட்களை நன்கு கருகும் வரை வறுத்து இடித்துக் கொள்ள வேண்டும்.

**கலவை 1**

  

சின்ன சீரகம் கசகசா வெந்தயம்

  

மிளகு மஞ்சள் பெருங்காயம்

**கலவை 2**

| | |
|---|---|
| வெங்காயம் | 10 பல் |
| புளி | 100 கிராம் |
| பூண்டு | 5 பல் |

மேற்கண்ட பொருட்களை நன்கு அரைத்துக் கொள்ள வேண்டும்.

**கலவை 2**

  

வெங்காயம் புளி பூண்டு

**சிகிச்சை முறை (வாய் வழியாக)**

இந்த இரு கலவைகளையும் 100 கிராம் கருப்பட்டி (பனை வெல்லம்) சேர்த்து கலந்து சிறு சிறு உருண்டைகளாக கல் உப்பினில் (தேவைப்படும் உப்பு – 15 கிராம்) தோய்த்தெடுத்து நாக்கின் மேல் பகுதியில் தேய்த்த வண்ணம் ஒரே வேளையில் அனைத்து உருண்டைகளையும் உள் செலுத்த வேண்டும்.

**விட(ஷ)க்கடி (Poisoning)**

விட தன்மையுள்ள உயிரினங்களான தேள், குளவி, வண்டு, பூரான், அரணை மற்றும் சிறு பாம்புக் கடியினால் தோலில் தடிப்பு, உடல் வீக்கம், வயிறு உப்புசம், வாயில் நீர் வடிதல், முச்சுத் திணறல் போன்ற அறிகுறிகள் ஆடுகளில் தென்படும்.

**ஒரு ஆட்டுக்கு தேவைப்படும் மூலிகை மற்றும் மருந்துப் பொருட்கள்**

| | | | |
|---|---|---|---|
| தும்பை இலை | 15 எண்ணிக்கை | வெங்காயம் | 10 பல் |
| சிறியா நங்கை | 15 எண்ணிக்கை | வெற்றிலை | 5 எண்ணிக்கை |
| மிளகு | 10 எண்ணிக்கை | வாழைப் பட்டை சாறு | 50 மி.லி |
| சீரகம் | 15 கிராம் | கல் உப்ப | 15 கிராம் |







தும்பை இலை சிறியா நங்கை மிளகு சீரகம்







| | | | |
|---|---|---|---|
| வெங்காயம் | வெற்றிலை | வாழைப் பட்டை சாறு | உப்பு |

**சிகிச்சை முறை (வாய் வழியாக)**

சின்ன சீரகம், மிளகினை இடித்து பின்பு இதனுடன் மற்ற பொருட்களுடன் சேர்த்து அரைத்து இக்கலவையை சிறு உருண்டைகளாக 100 கிராம் கருப்பட்டி (பனை வெல்லம்) கலந்து உப்பில் தொட்டு நாக்கின் மேல் தேய்த்து ஒரே வேளையில் அனைத்து உருண்டைகளையும் உள் செலுத்த வேண்டும்.

மூலிகை மருத்துவம் குறித்த மேலும் விபரங்களுக்கு
தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி
பேராசிரியர் மற்றும் தலைவர்
மரபுசார் மூலிகைவழி கால்நடை மருத்துவ பயிற்சி மற்றும் ஆராய்ச்சிக்கூடம்,
கால்நடை மருத்துவ பல்கலைக்கழக பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையம்,
நாஞ்சிக்கோட்டை சாலை, தஞ்சாவூர் – 613 006.
தொலைபேசி எண் : 04362-255462



Ethno veterinary practices for goat

**Pest-des- Petits-Ruminants (PPR)**

This disease is caused by certain toxic micro organism. The fever will persist for 6 to 8 days. Mouth ulcer, tears from the eyes and nose and loose stools are the symptoms of the disease. To control this disease vaccination is a must. Goats are very vulnerable to this disease.

Medicinal products needed for 5 goats:

| | |
|---|---|
| Cumin (small) 15 g | Pepper 5 Nos. |
| Fenugeek 15 g | Garlic 5 Nos. |
| Tumeric 5 gram | Moringa leaves 50 g |
| *Cissus Quadrangularis* (Pirantai) - 5 tender leaves | jaggery (palm) 500 g |









Cumin Fenugreek Tumeric *Cissus Quadrangularis* (Pirandai)









Pepper Garlic Moringa leaves Jaggery (palm)

Method of treatment (three times through oral feeding)

Along with the above mentioned products, cumin (small), fenugreek and pepper are ground and mixed and made as small balls and mixed along with salt (needed salt -15 grams).Rub it on the tongue and feed all the balls.

## Enteritis

Diluted and foul-smelling loose stools will be noticed. On the tail and hind legs deposits of stools will be found. Excess amount of water content and mineral salts will be drained out, so the goat becomes weak.

Medicinal products needed for 5 goats

Mixture I

| | |
|---|---|
| Cumin (small) 20 g | Pepper 5 Nos. |
| Opium seed (Khasa khasa) 20 g | Tumeric 5 g |
| Fenugreek 20 g | Asafoetida 5 g |

The above ingredients should be fried nicely and later ground.

Mixture 1

  

Cumin Khasa khasa Fenugreek

  

Pepper Tumeric Asfoedita

Mixture 2

| | |
|---|---|
| Onion (small) | 10 Nos. |
| Garlic | 5 Nos. |
| Tamarind | 100 g |

Mixture II

  

Onion Garlic Tamarind

The above ingredients should be ground well.

Method of treatment (orally)

These two mixtures are mixed along with 100 grams jaggery (palm sugar) and made into small balls again it is coated with the salt (needed salt - 15 g).These balls are rubbed on the tongue and feed to the animal orally.

**Poison bite**

The bites of poisonous species *viz.*, scorpion, wasp, centipede and small snakes will cause symptoms like skin rashes, swelling of the body, stomach bloat, dripping of saliva from the mouth and suffocation.

| | | | |
|---|---|---|---|
| *Leucas aspera* (Thumbai leaf) | 15 Nos. | Onion | 10 Nos. |
| *Polygala chinesis* (Siriya nagai) | 15 Nos. | Betelvine | 5 Nos. |
| Pepper | 10 Nos. | Banana Pseudo stem juice | 50 ml |
| Cumin | 15 g | Salt | 15 g |







*Leucas aspera* (Thumbai) *Polygala chinesis* (Siriyanagai) Pepper Cumin








Onion Betelvine Banana Pseudo stem Juice Salt

Method of treatment (oral)

Cumin (little) and pepper are powered and mixed with other ingredients and ground and made into a paste. Then small balls are made and mixed with jaggery (palm-100g). Later salt is coated around the balls and rubbed in the tongue of the animal and the entire ball is fed at the same time.

For more information on herbal medicine

Contact Address

Professor and Head ,

Ethno Veterinary Herbal Training and Research Centre ,

Nancikkottai Road, Thanjavur - 613 006.

Phone Number: 04362-255462